**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 21.07.2025.**

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**
**<u>அசல் வழக்கு எண். 53/2019</u>**

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இலட்சுமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 56 |
| ஊர் | : | உக்கல், பெண்டை கிராமம் | தொழில் | : | கோழி பண்ணை |

<u>பி.சா.1 (இலட்சுமி): பிரதிவாதிகள் தரப்பில் முதல் சாட்சியின் **குறுக்கு விசாரணை:**</u>

நான் இவ்வழக்கில் பிரதிவாதியாவேன். **நான் பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி (பி.சா.1) ஆவேன்.** நான் 8-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க ஓரளவுக்கு தெரியும். விஜயா தொடர்ந்த இவ்வழக்கை படித்து பார்த்தீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்தேன். தாவா சொத்தை 63 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது உண்மையா என்றால் உண்மைதான். 63 பட்டாக்களில் 42-வது பட்டா எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2-ல் 42-வது மனை யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. இந்த விவரம் எனக்கு வழக்கு போட்டபோது தான் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆனது என்ன பத்திரம் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதை கோர்ட்டார் படித்து கேட்ட போது தெய்வநாயகி, தேன்மொழி, சசிகுமார் மற்றும் விஜயா ஆகியோரிடமிருந்து நான்கு மனை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

அந்த மனை எண்கள் 14,15,19 மற்றும் 21 என்றால் சரிதான். ஆனால் அவர்கள் என் உறவுமுறை என்பதாலும் என் பாட்டனார் சொத்து என்பதாலும் மட்டும் தான் நான் வாங்கினேன். மேற்படி உறவு முறை பற்றியும் பாட்டனார் சொத்து என்று கூறிய விவரங்கள் வா.சா.ஆ.3 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி மனை எண்கள் 14,15,19 மற்றும் 21 ஆகியவைகள் 63 நபர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்ட மனையில் அடங்கியுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை 30.01.2014 அன்று வாங்கியுள்ளேனா என்றால் சரிதான். அதில் பட்டா பிரித்தது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஜக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாா்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தாா்

K NALEENI Digitally signed by K NALEENI Date: 2025.07.21 19:01:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு